Registered No. M. 2330 "SIDDHANTHAM"

Vol. 40—No. 3

சித்தாந்தம்

சைவ சித்தாந்த மகா சமாஜத் திங்கள் வெளியீடு

'தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே'

ர் 40 | பராபவ பங்குனி 1967 மார்ச் | இதழ்

உள்ளுறை பக்கம்

ஒலிபரப்பு	41
இந்து அறிஞர் மாநாடு	43
வழுவூர் வீரட்டம்	46
கோகழி பற்றிய சிந்தனை	53
சைவ சித்தாந்தி யார்?	59
சைவத்தின் தொன்மை	62
சமய வாழ்க்கை—இங்கும் அங்கும்	64
மதிப்புரை	70

பத்திராசிரியர்: மு. அருணாசலம், எம். ஏ.,

துணைப் பத்திராசிரியர்: வித்துவான் அம்பை. இரா. சங்கரன்.

சைவ சித்தாந்த மகா சமாஜம்,
12, கிழக்கு மாடவீதி, மயிலாப்பூர், சென்னை-4.

திருமணம்

நம் சமாஜ உறுப்பினர் திரு, க. மா. தங்கவேல் முதலியார் அவர்கள் செல்வர்: திரு. இராமலிங்கத்திற்கும், கலியாணம் பூண்டி திரு ந. சி. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் திருமகளார்: வாசுகியம்மைக்கும் 22-2-67 புதன் காலையில் திருமணம் நிகழ்ந்தது.

புதுமணம் புரிந்து கொண்ட தம்பதிகளிருவரும் நீல மேனி வாலிழைபாகன் தண்ணருளால் எல்லா நற்பேறுகளும் இனிது பெற்று நானிலத்து நீடு மன்னி வாழ அவனிணையடிகளேயே துதித்து அருள் செய்ய வேண்டுகிறோம். இத் திருமண நன்கொடையாக திரு. தங்கவேல் முதலியார் அவர்கள் சமாஜத்திற்கு அளித்த சமயக் காணிக்கை ரூ. 10-00 (பத்து) வரப் பெற்றோம். (துணைச் செயலாளர்)

பிற செய்திகள்

தவத்திரு. சாந்தலிங்க அடிகளார் குருபூசை விழாவும் வார வழிபாட்டு விழாவும் சத்வித்யா சன்மார்க்க சங்க 51 ஆம் ஆண்டு விழாவும் முறையே 24-2-67, 25-2-67, 26-2-67 தேதிகளில் கோவைக்கடுத்த திருப்பேரூர் சாந்தலிங்க அடிகள் திருமடத்தில் நிகழ்ந்தன. மயிலம் பொம்மபுர ஆதீனம் 19ஆம் பட்டம் அருண்மிகு சிவ ஞான பாலைய அடிகள் அவர்களும் உயர்திரு ஏ. வி. கிரிக் கவுண்டர் அவர்களும் உயர்திரு. குரு. கனகசபைப் பிள்ளையவர்களும் இம் மூன்று நாட்களிலும் தலைமை தாங்கினர். சிதம்பரம் மௌன மடம் தவத்திரு சபாபதி சுவாமிகள், உயர்திரு திருவாசகமணி கே. எம். பாலசுப்பிரமணியம் முதலிய பல பெரியார்கள் கலந்து சொற்பெருக்காற்றினர்.

மயிலம் வார வழிபாட்டு 14ஆம் ஆண்டு விழாவும், முருகன் செந்தமிழ்க் கழக 30ஆம் ஆண்டு விழாவும் 10-3-67, 11-3-67 வெள்ளி, சனிக் கிழமைகளில் மாலையில் அருள்திரு மௌன சபாபதி சுவாமிகள், மகா வித்துவான் மே. வீ. வேணுகோபால் பிள்ளை அவர்கள் தலைமையில் முறையே சிறப்புற நிகழ்ந்தன.

Reg. M. 2330

உ

சிவமயம்

சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியைஉள் நாடு.

மலர் 40	பராபவ பங்குனி 1967 மார்ச்	இதழ் 3

ஒலிபரப்பு

(ஆசிரியர்)

அன்பே கடவுள்—சத்தியமே கடவுள் என்ற ஒரு பெருந் தத்துவத்தைத் தம் தனி வாழ்க்கைக்கும் பொது வாழ்க்கைக்கும் லக்ஷ்யமாகக் கொண்டு வாழ்ந்து வந்தவர் மோகன்தாஸ் கரம்சந்திர காந்தி; இது காரணமாகவே அவர் மகாத்மா என்று கவி ரவீந்திரநாததாகுராலும் உலக மக்களாலும் பாராட்டப் பெற்றவர். "இவர் ஐரோப்பாவின் மிருக பலத்தைத் தமது சாமானிய மனிதப் பண்பினால் எதிர்த்து எப்போதும் வெற்றி பெற்றவர். எதிர்காலத்தில் வரும் பல தலைமுறைகள் இப்படிப்பட்ட மனிதரொருவர் என்புதோல் போர்த்த உடலோடு உலகில் வாழ்ந்தார் என்பதை நம்புவதும் அருமை" என்று இந்த இருபதாம் நூற்றாண்டின் சிறந்த விஞ்ஞான மேதைகளுள் ஒருவரான ஐன்ஸ்டைன் 1944-ல் எழுதினார்.

அந்த மகாத்மாவின் வாரிசு நாங்கள் என்று சொல்லிக்கொண்ட அரசாங்கம் சென்னையிலும் பிற இந்திய மாகாணங்களிலும் ஏறக்குறைய சென்ற இருபது வருஷங்களாக ஆட்சி செலுத்தி வந்தது. அந்த அரசாங்கம், மத்திய அரசில் இப்போது நடந்த தேர்தலில் வெற்றி

பெற்ற போதிலும் கூட, சென்னை மாநிலத்தில் படு தோல்வி யடைந்திருக்கிறது. பெருந் தலைவர்கள் அனை வரும் ஒருவர் பாக்கி இல்லாமல் தோற்றுப் போனார்கள். இந்த அரசியல் நிலை அறிவுடையவர் அனைவரையும் சிந்திக்கச் செய்யவேண்டும்.

"அதிகாரமமதை ஆளைக் கெடுக்கும்" என்று ஆங் கிலத்தில் ஒரு பழமொழி உண்டு. பருப்பொருளாகப் பார்க்கும்போது இதுவே சைவ சித்தாந்தம் கூறும் ஆண வம் என்றதற்கொப்பு. மகாத்மா காந்தி தம்முடைய வாழ்வில் ஒவ்வொரு கணமும் கடவுளே உடனின்று தம்மை நடத்துவதாக உணர்ந்தவர். ஆனால் இதுவரை அரசாண்டவர்கள் இந்தச் சிந்தனையோடு ஆட்சி செலுத் தினார்கள் என்று சொல்ல முடியாது. ஆட்சியோ 'சமயச் சார்பு அற்ற ஆட்சி'. பின் வரும் ஒரு கட்டுரையில் கூறியதிலிருந்து இவ்வாட்சியானது சமயம் கூடாது என்ற கொள்கையைக் கொண்டிருந்தது என்பதையும் நாம் அறிகிறோம். ஆகவே இவ்வாட்சி அடியோடு முறியடிக் கப்பட்டதில் வியப்பில்லை. இதில் நல்லவர்களும், திறமை சாலிகளில் சிலரும் மற்றவர்களோடு சேர்ந்து தோற்கத் தான் நேர்ந்தது. இது தவிர்க்க முடியாதது.

நாட்டில் ஏற்பட்ட உணவுப் பஞ்சமும் விலை வாசி கள் ஏற்றமும் ஆளும் வர்க்கத்தினர் தோல்விக்கு ஒரு காரணம் என்று சொல்கிறார்கள்; இது உண்மையே. புதிதாய்ப் பதவிக்கு வந்தவர்களும் இதை ஒப்புக் கொண்டு பேசுகிறார்கள்.

இந்திய நாட்டின் சமயக் கொள்கைக்கு வேர் போன் றது தமிழ்நாடு. இங்குள்ள ஆலயங்களும் விழாக்களும் வழிபாட்டு முறைகளும் பிற சக்திகளின் தாக்குதலுக்கு இரையாகாமல் பல ஆயிரம் ஆண்டுகளாகத் தொடர்பு பெற்று நிலவி வருகின்றன. இது தமிழ்நாடு ஒன்றுக்கே உரிய தனிச் சிறப்பு. இவை சமயம் என்ற துறையில் மட்டுமின்றி கலை, நாகரிகம், மக்கள் வாழ்வு என்ற துறை களில் தமிழ் நாட்டுக்கு நீண்ட காலமாக எழுச்சியும்

விளக்கமும் தந்து வந்திருக்கின்றன. இவற்றைப் பேணி வளர்ப்பது அரசாங்கத்தின் கடன்.

மக்களிடத்தில் எந்த வறுமை குடி கொண்டாலும் பண்பாட்டில் வறுமைபுக இடங் கொடுக்கக் கூடாது. பண்பாட்டை நம் சமயங்கள், சிறப்பாகச் சைவ சமயம் அன்பே சிவம் என்ற பெரும் கொள்கையோடு வளர்த்து வந்திருக்கிறது. இங்கு மட்டுமன்று; கடல் கடந்து தமிழ் மக்கள் சென்ற இடங்களில் எல்லாம் தமிழ் மக்களுடைய வாழ்க்கையின் பண்பாட்டுக்கு நிலைக்களமாகச் சைவ சமயமும் சைவ ஒழுக்கமுமே இருந்து வந்திருக்கின்றன.

ஆகவே இந்த நினைவோடு நாம் சைவர்கள் என்ற முறையில் புதிதாகப் பதவிக்கு வருகின்ற சென்னை மாநில ஆட்சியாளருக்கு நல்வரவும் வாழ்த்தும் கூறுகின்றோம். சமய வளர்ச்சியானது தமிழ்ப் பண்பாட்டிற்கு அடிப் படையானதால் சமயத்தைப் பேணிவளர்ப்பது அவர்கள் கடமை. சமயத்தைப் பேணுவதற்கும் தங்கள் முன் னுள்ள பிற சிக்கல்கள் அனைத்திலும் வெற்றி காணு வதற்கும், போதிய ஆற்றலை ஆண்டவன் அவர்களுக்கு அருளுவானாக.

இந்து அறிஞர் மாநாடு

(துணையாசிரியர்)

வெளி நாடுகளில் கிட்டத்தட்ட இரண்டு கோடி இந்து மக்கள் வாழ்கிறார்கள். அவர்களை இந்துக்களாக இந்துப் பழக்க வழக்கங்களுடன் பண்பாட்டோடு வாழ வைக்க என்ன வகை செய்யலாம்?

இந்தியாவுக்குள் வாழும் இந்து மக்கள் பலவித வழி பாட்டு முறைகளால் பிரிந்து பிளவுற்றிருக்கின்றனர். வழிபாட்டு முறைகள் அனைத்தும் ஒரே பரம்பொருளை அடைய அமைக்கப்பட்டவையாயினும் இன்று அவை

அடிப்படை ஒற்றுமையை மறந்துள்ளன. வேதாந்தம், வைணவம், கணுபத்யம், சாக்தம், பௌத்தம், ஜைனம், சீக்சம்பிரதாயம், இலிங்காயதம், சைவ சித்தாந்தம் முதலிய எல்லாவற்றுக்கும் அடிப்படையாகப் பொதுவாக உள்ள தன்மைகள் யாவை? பாமர மக்களுக்குச் சாத்தியமாகக் கூடிய குறைந்த பட்சசாமானிய அனுட்டானம் அனைவருக்கும் பொதுவாக உள்ளது எது? கடந்த பத்து ஆண்டுகளுக்குள் இந்து மக்களின் ஜனத்தொகை கிட்டத் தட்ட 3% குறைந்து பிற மதத்தவர் எண்ணிக்கை 5% ஏறியுள்ளது. இந்நிலையில் இந்து மதத்திலுள்ள எல்லாப் பிரிவையும் சார்ந்த மக்களுக்குச் சமயத்தின் மீது ஆழ்ந்த பிடிப்பு ஏற்படும்படி செய்யவும் மதம் மாறிப் போனவர்கள் தாய் மதத்துக்குத் திரும்ப விரும்பினால் அவர்களை ஏற்றுக் கொள்ளவும் என்ன செய்ய வேண்டும்? திரும்ப வரும் மக்களைச் சமூகத்தில் எப்படிப் புனரமைப்பது?

காடு மலைகளிலும் குக்கிராமங்களிலும் வாழும் மக்கள் சமயத்தைப் பற்றி எளிதில் தெளிவாக உணரவும் வாழவும் என்ன செய்யலாம்?

இவ்வாறாகப் பல கேள்விகள் நாடு முழுவதுமுள்ள இந்துப் பெருமக்களைப் பல காலமாக வாட்டி வந்துள்ளன. இக் கேள்விகளுக்குப் பதில் காண ஆங்காங்கு முயற்சிகள் நடந்தாலும் நாடு முழுதும் உள்ள சமயத் தலைவர்களும் குருநாதர்களும் சிந்தனையாளர்களும் ஒருங்கிணைந்து தங்களுள் மரியாதையுடனும் கனிவுடனும் அன்புடனும் அமர்ந்து இந்த நவீன காலத்துக்கேற்ப நவீன யுகத்தின் தேவைகளைக் கணக்கில் கொண்டு வழிகாண முயற்சி செய்யாதது ஒரு பெருங் குறையாக இருந்தது.

இறைவனின் திருவுள்ளப் பாங்கின்படி கடந்த கும்ப மேளாவின் போது (1966 சனவரி 22, 23, 24ஆம் நாட்களில்) கங்கையும் யமுனையும் சரசுவதியும் கூடும் புண்ணிய தலமாம் பிரயாகையில் பல நூற்றாண்டுகளுக்குப் பிறகு சங்கராசாரிய பீடங்கள், மத்வாசாரியார்கள், வைணவ ஆசாரியார்கள், பௌத்த குருமார்கள், சைனத்

துறவிகள் ஆகியோர் ஒரே மேடையில் அமர்ந்து மறுமலர்ச்சியும் புத்தெழுச்சியும் புத்துயிரோட்டமும் பெற்ற இந்து அற, உலக வாழ்வுக்கு வித்திட்டார்கள். 45000க்கு மேற்பட்ட மக்கள் நாடனைத்திலுமிருந்து வந்து மூன்று நாட்கள் அங்குத் தங்கி ஆர்வத்துடன் நிகழ்ச்சிகளில் பங்கு கொண்டார்கள்.

உலகாயத வாதங்களால் அதிருப்தியடைந்து உளம் நொந்து வாடுகின்ற உலகம் இந்து சமயத்தைப் பற்றியும் ஆத்மஞானத்தைப் பற்றியும் அறிய ஆவலுடன் காத்து நிற்கின்றது. நமது வீட்டை நாம் தூய்மைப் படுத்தி நமது பிளவு, பிணக்குகளை மூட்டை கட்டி வைத்து நாயன்மார்களும் ஆழ்வார்களும் பாடிப் பரவிய பரம் பொருளை எய்தும் மெய்ஞ்ஞானப் பாதையைக் கடைப் பிடித்துப் பின்னர் உலகுக்கு உணர்த்த வேண்டிய தேவை இன்று ஏற்பட்டு விட்டது. வெளி நாட்டுத் தாக்குதல், புறச் சமயத் தாக்குதல், புற நாகரிகத் தாக்குதல் நம் மககளிடையே பரவி வரும் ஒழுக்கக்கேடு இவை யனைத்தையும் சமாளிக்க நாட்டிலுள்ள நல்லோர் அனைவரும் தம் ஆற்றல் அனைத்தையும் குவித்து ஒருமுகமாக, ஒருடலாக, ஒரு மனத்தோடு எழுந்து செயலாற்ற முனைவது மிகவும் அவசரம் ஆம்.

இதற்காக ஏற்பட்டுள்ள அமைப்பே உலக இந்துக்கள் பேரவை. (விசுவ இந்து பரிஷத்) மேன்மை தங்கிய மைசூர் பேரரசர் செயசாமராசவாடியர் அவர்கள் இவ்வமைப்பின் தலைவர். தமிழ் நாட்டின் பிரிவுக்குத் தலைவர் திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகளாவர். தமிழவேள். பி. டி. இராசன், சைவப் பெரியார் ச. சச்சிதானந்தம் பிள்ளை, திரு. கி. வா. சகந்நாதன் ஆகியோர் இதன் துணைத்தலைவர்கள் ஆவர்.

தொடக்கத்தில் குறிப்பிட்டுள்ள கேள்விகளை ஒரு வினாத்தாளாக அமைத்து நாட்டிலுள்ள 2500 அறிஞர்களுக்கும் பேரவை அனுப்பியது. அவர்கள் அனுப்பி வைத்த பதிலைத் தொகுத்து அதனை ஒரு அறிஞர் மாநாடு

ஆராய்ந்து ஏற்றுக் கொள்ள 1967 மார்ச்சு 26, 27, 28 ஆம் நாட்களில் சென்னை நகரில் ஒரு 'அறிஞர் அவை' கூட இருக்கிறது. நாடனைத்திலுமிருந்து பல அறிஞர் பெரு மக்கள் இதில் கலந்து கொள்ள வரும்படி அழைக்கப்பட்டுள்ளனர். மைசூர் மன்னர் இதனைத் திறந்து வைப்பார். சமய குருநாதர்கள் அறிஞர் அவையை நடத்தி வைப்பார்கள். முடிவுகள் இறுதி நாளாம் 28ஆம் தேதியன்று வெளியிடப்படும்.

இந்த அவை சென்னை புரசைப்பாக்கத்திலுள்ள தர்மப் பிரகாச மண்டபத்தில் நடைபெறும். மாலை நேரங்களில் 26, 27, 28 தேதிகளில் பொதுச் சொற்பொழிவுகளும் நடைபெறும்.

தமிழக மக்கள் நம் மாநிலத்துக்கு வரும் அறிஞர்களை வரவேற்கவும் மாலை நிகழ்ச்சிகளில் பங்கெடுத்து ஆக்கமும் ஊக்கமும் அளிக்கவும் வேண்டுகின்றோம்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :-

S. சம்பத்குமார், 'வழக்கறிஞர்'
5. கொண்டிசெட்டித் தெரு,
சென்னை-1.

—(:o:)—

வழுவூர் வீரட்டம்

(மு. அ)

வழுவூர் அட்ட வீரட்டத் தலங்களுள் ஒன்று. சிவ பெருமான் தம்மீது தாருகாவனத்து ரிஷிகள் ஏவிய யானையை உரித்த பராக்கிரமச் செயல் இத்தலத்தில் நிகழ்ந்தது. கோயில் பெரிய கோயில். இதன் கும்பாபிஷேகம் 23-1-1967 இல் நடைபெற்றது.

இடம்: மாயூரம் பஸ் நிலையத்திலிருந்து திருவாரூர் செல்லும் பஸ் மார்க்கத்தில் 4 மைல் 2 பர்லாங் தூரத்தில்

சாலையிலிருந்து மேற்கே செல்லும் கப்பிச் சாலையில் ஒரு மைல் தூரம் சென்ருல் நேரே கோபுர வாயிலை அடையலாம். இலந்தங்குடி ரயில் நிலையத்திலிருந்து 6 பர்லாங் மேற்கே உள்ளது; சிறு கிராமம்.

பெயர்: ஊர் வழுவூர்; உலகம் யாவும் அழிய தான் மட்டும் அழிவிலிருந்து வழுவியமையால் இவ்வூர் வழுவூர் என்பர்; வட மொழியில் சியுதபுரி. மேலான கயிலாயம் ஆனமையால் பரகைலாசம்; தன்னை அடைந்தோர்க்கு ஞானம் அருளுவதால் ஞானபூமி எனப் பல பெயர்கள் வழங்குகின்றன. புராணத்தில் பிப்பலாரணியம் என வழங்கும். பிப்பலம்—அரசு. கோயில்—வீரட்டம், வீரட்டானேசுவரம்; பராக்கிரமச் செயல் நிகழ்ந்தமையால், சுவாமி வீரட்டானேசுவரர். அம்பிகை இளங்கிளை நாயகி, பாலாங்குராம்பிகை, கிருபாவதி.

சுவாமி யானைத் தோல் போர்த்தியவர். ஆதலால் திருநாமம் இருத்திலாசர் (யானைத் தோல் போர்த்தியவர்) கஜமர்த்தனர் என்ற பெயருமுண்டு. தல விருட்சம், தேவதாரு, பலா, அரசு, வன்னி என்று பலவாறு கூறுவர். சில தல வரலாறுகளில் உள்ளது போல, யுகத்துக் கொன்ருகக் குறிப்பிடுவது போலும். கல்வெட்டில் ஊரின் பெயர் வழுவூர் என்றும் சுவாமி திரு வீரட்டானமுடையவர் என்றும் வழங்கும்

கோயில்: சிறப்பான பெரிய கற்கோயில்; சந்நிதி, முன் கோபுரம் பெரிது. ஐந்து நிலை. உள் நுழைந்தவுடன், நீண்ட சதுர அமைப்புடைய பெரிய திருக்குளம். நாற்புறமும் கற்படிகள் கட்டிப் பாதுகாப்பாயுள்ளது. இது ஈசான தீர்த்தம் என்ற பெயருடையது; சிவபிரானது ஐந்து திருமுகங்களையும் குறிப்பிடும் பஞ்சப் பிரம தீர்த்தம் என்றும் இதற்குப் பெயர் சொல்வர். கோயில் நான்கு பிரகாரங்கள் உடையது. சுவாமி கோயிலின் முன் வாயிலை அடுத்து வடபால் தனிக்கோயிலில் சகஸ்ர லிங்கம் உள்ளது. அடுத்து வடபுறம் அம்பிகை கோயில் கிழக்கு நோக்கியது, தனிக்கோயில். சோமாஸ்கந்தரும்

தனிக்கோயிலில் இரண்டாம் பிரகாரத்தில் இருக்கிறார். தென் திருமாளிகைச் சுற்றில் நால்வர், அறுபத்து மூவர் உள்ளனர். வட திருமாளிகைச் சுற்றில் கஜ சம்மாரத் தைக் காட்டும் ஐதிகப் படங்கள் புதிதாக எழுதப்பட் டுள்ளன.

மூர்த்தி : இரண்டாம் வாயிலின் இருபுறமும் விநா யகர், முருகன்; சுதை வேலை பெரிய துவார பாலகர். தல விநாயகர் செல்வ விநாயகர், கைவல்ய ப்ராப்த விநாயகர் என்ற பெயரும் உண்டு. தென் கோட்டத்தில் கற்ப கணபதி; யோக தக்ஷிணாமூர்த்தி மேலே கஜசம்மார மூர்த்தி, சிறுபுடைச் சிற்பம், பின்புறம் லிங்கோத்பவர் பிர்ம விஷ்ணுக்கள், நிருதி விநாயகர், தனி லிங்கமும் அம்பிகையும், சரசுவதி, பல லிங்கங்கள், பைரவர் கோயிலில் தேவியரோடு முருகன். பின்னர் பாலசுப்பிர மணியர், சிலை வடிவமான கஜலக்ஷ்மி, அடுத்து பெரிய வடிவில் சுதை வடிவமான கஜலக்ஷ்மி, கோட்டத்தில் பிரமன், துர்க்கை, சண்டேசர் கோயில், மற்றொரு தனிக் கோயிலில் அகத்தியர் பூசித்த லிங்கம், ஈசானிய திசை யில் சூரியன், சந்திரன், பைரவர், நவக் கிரகங்கள்-புதிய பிரதிட்டை. சுவாமி நடுத்தர லிங்க வடிவினர். வாயி லில் கல்லாலான சிறு துவார பாலகர். அம்பிகை அழ கான சிறிய திருவுருவம். அம்பிகைக் கோட்டத்தில் தக்ஷிணாமூர்த்தி. இச்சா சக்தி, கிரியா சக்தி என மூன்று புறமும் உள்ளனர்; தக்ஷிணாமூர்த்தி இருந்த இடத்தில் ஆதியில் ஞான சக்தி இருந்திருப்பர் போலும். தனி சண்டேசுவரி கோயில். கோயில் உள் வாயிலில் சுதை துவார பாலகியர்.

உற்சவ மூர்த்திகள் சிறப்பானவர். தல வரலாற்றுக் கேற்ப இங்கு ஐயனார், பால சாஸ்தா (அரிகர புத்திரர்) யானை மேலமர்ந்த கோலம், கலியாண சுந்தரர் (ஆலிங் கன மூர்த்தி) முருகன், பிக்ஷாடனர் தனியே உள்ளார். மிகவும் அழகும், சிறப்பும், பிரகாசமும் பொருந்திய பெரிய வடிவம்; தல வரலாற்றுக்குப் பொருந்துவதாக உள்ளார். அப்படியே மோகினி வடிவமான மோகனும்

பிகையும், நடராச மூர்த்தியும், அம்பிகையும் நடுத்தர வடிவினர்; வழக்கம் போல் சிறப்பாக அமைந்துள்ளனர்.

இத் தலத்துக்குச் சிறப்பான மூர்த்தி கஜசம்மார மூர்த்தி. அட்ட வீரட்டங்களில் இது கஜசம்மாரத்தல மாதலால், இம் மூர்த்தி பெரும் சிறப்போடு, பிற தலங்களில் நடராசர் தனிச் சபையில் அமர்ந்திருப்பது போல, தனிச் சபையில் அமர்ந்திருக்கிறார் இச்சபை ஞான சபை எனப்படும். மூர்த்திபெரிய உருவம். அழகான மூர்த்தி இரண்டு கைகளால் யானையை உரித்துத் தோலை விரித்துப் பிடிக்கிறார். இதனால் கிருத்திவாசர் என்ற பெயர் பூண்டார். யானையின் கால்களும், வாலும் தொங்குகின்றன. இடது காலைத் தூக்கி யானையின் மத்தகத்தின் மீது நின்று பெருமான் கஜமர்த்தன நடனம் ஆடுகின்றார். தூக்கிய திருவடியின் உள்ளங்கால் அனைவரும் நன்கு தரிசிக்கும் படியாகச் சுழன்று காட்டுவது வேறெங்குமே காண்பதற்கில்லாத ஓர் அற்புதக் காட்சி. அருகில் அம்பிகை நிற்கிறார். தம் மீது வேகமாக ஓடி வந்த யானையை அடக்கி உரித்தவர் பெருமான். ஆனால் அதை உரித்துப் போர்த்த செயலும் பயங்கரமானது. யானை வரக் கண்டு அஞ்சிய உமாதேவியார் மீண்டும் யானையைப் பெருமான் உரித்தது கண்டும் அஞ்சினார் என்பது வரலாறு. இதைத் தேவாரமும் திருவாசகமும் குறிப்பிடுகின்றன. "வேழம்–உரித்தமை அஞ்சக் கண்டு ஒண் திருமணி வாய் விள்ளச்–சிரித்தருள் செய்தார்" என்பது அப்பர் தேவாரம். "கொடுங்கரிக் குன்று உரித்தஞ்சுவித்தாய் வஞ்சக் கொம்பினையே" என்பது திருவாசகம். இக் கருத்தை அம்பிகையின் திருவுருவத்திலேயே காணலாம். அஞ்சிய உமை, பெருமானை விட்டுப் பிரிந்து உலக வழக்கில் சொல்வது போலக் கோபித்துக் கொண்டு, தாய் வீடு நோக்கிப் புறப்பட்டு விட்டார்; அவர் திருப்பாதங்கள் வேறு திக்கில் திரும்பி விட்டன. ஆனால் தேவியார் போகத் துணியாது, பெருமானைத் திரும்பித் திரும்பிப் பார்க்கிறார். இடுப்பில் கந்தமூர்த்தி; இவரும் பெருமானுடைய யானை உரித்த கோலத்தைச் சுட்டிக் காட்டுகிறார். யானையை உரித்து பிடித்த கருத்து, யானையின்

இரத்தம் பூமியில் சிந்தக் கூடாது என்பது. சுவாமி எட்டுக் கையுடையவர்.

பாடல்: இது வைப்புத்தலமாக அப்பர் சுவாமிகளால் க்ஷேத்திரக் கோவைத் திருத்தாண்டகத்தில் வழுவூர் வீரட்டம் என்றும், அட்ட வீரட்டம் கூறிய அடைவு திருத்தாண்டகத்தில் வழுவை வீரட்டம் என்றும் பாடப் பெற்றுள்ளது. அருணகிரி நாதர் பாடிய 'தருவூரிசையார்' 'தலை நாளில் பதமேத்தி' என்ற இரு திருப்புகழ்ப் பாக்களை யுடையது. சிதம்பர முனிவர் பாடிய க்ஷேத்திரக் கோவைப் பிள்ளைத் தமிழில் ஒரு பாடல், மற்றும் திருமுறைகள் தோறும் யானை உரித்த பராக்கிரமச் செயலைக் குறித்த பாடல்கள் பல உள்ளன. இதனை 'ஆனை தந்த குறையுடற் போர்வை போர்த்த கொற்றவன் கோயில் காண்மின்' என்று பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணம் அருச்சனைப் படலம் (பாடல் 22) குறிப்பிடும். வடமொழிப் புராணம் அச்சாகியுள்ளது.

வரலாறு: அட்ட வீரட்டங்களுள் இத்தலம் கஜாசுரசம்மாரம் நிகழ்ந்த இடம். அருகில் உள்ள பெருஞ்சேரி என்ற தலம் தாருகாவனம். தெய்வம் இல்லை என்று சாதித்த முனிவர்களுக்கு உண்மையை உணர்த்தி ஆட்கொள்ளப் பெருமான் பிக்ஷாடன வடிவத்தோடு எழுந்தருளினர். திருமால் மோகினி வடிவத்தோடு மோகனும் பாளாக எழுந்தருளினர். மோகினியால் முனிவர் தவம் குலைந்தது. பிக்ஷாடனரால் முனி பன்னியர் நிறை அழிந்தது. அது கண்டு சினந்த முனிவர் அபிசார ஹோமம் செய்து அதில் வந்த அக்கினி, புலி, மான், மழு, பாம்பு, முயலகன், மந்திரங்கள் என்பவற்றைப் பெருமான் மீது ஏவ, அவர் அவற்றை ஏந்தியும், கொன்றும், அணிந்தும், மிதித்தும் அருள் செய்தார். பின் அதில் வந்த யானையைப் பெருமான் மீது ஏவ, அவர் இத்தலத்தில் அதை அழித்தார்.

இவ்வாலயத்தில் பெருமான்—மோகனும்பிகை திருவுருவங்கள் பேரழகுடையன என்பது முன்பே சொல்லப் பட்டுள்ளது. மோகனும்பிகை திருவுருவம் எந்தத் தலத்

திலும் இல்லை. திருவதிகைக் கோயில் விமானத்தில் 25 சிவ மூர்த்தங்களும் சுதை வேலையால் அமைக்கப் பெற்றிருப்பது காணத்தக்கது. அவற்றுள் கஜமர்த்தன மூர்த்தம் அம்பிகையோடு வழுவூர் போலவே அமைக்கப் பட்டுள்ளது சிறப்புடையது. முருகனைத் தாங்கிக் கொண்டு அம்பிகை புறப்பட்டுச் செல்லுங் காட்சி இங்குப் போலவே அங்குமுள்ளது.

விழா: வசதியுள்ள கோயிலான படியால் தினம் ஆறு கால பூஜை நடைபெறுகிறது. நடராஜப் பெருமானுக்கு அபிஷேகம் நடைபெறுகிற ஆறு தினங்களில் கஜசம்மார மூர்த்திக்கும் அபிஷேகம் உண்டு. ஆருத்ரா தின அபிஷேகத்தன்று உதயத்தில் இம்மூர்த்தி தரிசனம் அருளுகின்றார். அம்பிகையோடும் நடராஜப் பெருமான், சிவகாமசுந்தரியோடும் தரிசனம் நடைபெறுகிறது. மூர்த்தி இருந்து எழுந்து ஆடி மூன்று முறை முன்னும் பின்னுமாகச் சென்று காட்சி கொடுக்கிறார். தரிசனம் காணத் தகுந்தது. இம்மூர்த்தி கோயிலிலே தங்கிவிட, நடராஜ மூர்த்தி வீதி உலா வருகிறார்.

மாசிமகத்தில் இப்பெருமான் தாருகாவனமாகிய பெருஞ்சேரியில் தரிசனம் கொடுக்கிறார். மற்ற எந்த நாளும் வெளியில் புறப்படுவதில்லை. அலங்காரம், புறப்பாடு முதலியன நூற்றுக் கால் மண்டபத்திலிருந்து எழும். இதிலிருந்து மற்றொரு கிளை நிகழ்ச்சியும் நடைபெறுகிறது. தாருகாவனத்தில் இருந்து திரும்புகின்ற பெருமான் யானையின் உடலினுள் புகுந்து விடுகிறார். அதற்கேற்ப மூங்கில் குச்சியால் பெரிய யானையைப் போல வடிவம் செய்து வைக்கிறார்கள். பெருமான் புகவே உலகமே இருண்டு விடுகிறது. பெருமானைக் காணாது அம்பிகை தவிக்க பிராட்டியின் இடையில் அமர்ந்துள்ள முருகப் பெருமான் 'இதோ பெருமான்' என்று அந்த நேரம் யானையை உரித்துக் கொண்டு வெளியே வருகின்ற பெருமானைச் சுட்டிக் காட்டுகிறார் என்று மூர்த்திகளின் உருவமைப்புக்களுக்கு ஒற்றுமையாக ஒரு வரலாறு கூறுகிறார்கள். இது சிறிதும் பொருந்தாது என்பது தெளிவு.

தொடக்கத்தில் சொல்லிய வரலாறே திருமுறைக் குறிப்புக்களுக்குப் பொருந்துவதாகியுள்ளது

கல்வெட்டு: பதினைந்து கல்வெட்டுக்கள் படியெடுக்கப்பட்டுள்ளன. இரண்டாம் இராஜராஜன், இரண்டாம் இராஜாதிராஜன், மூன்றும் குலோத்துங்கன், மூன்றும் இராசேந்திரன் சுந்தர பாண்டியன், விசய நகர மன்னர் ஆகியோர் கல்வெட்டுக்கள் இங்கிருக்கின்றன. ஒரு கல்வெட்டு குலோத்துங்கன் மதுரையும், ஈழமும் கொண்டருளி வீராபிஷேகம் செய்து கொண்ட செய்தி கூறும். இவ்வூர் வழுவூர், நாடு—திருவழுந்தூர் நாடு. செயங்கொண்ட சோழவள நாடு என்றும் தெரிகிறது. நிலதானம், விளக்கு, பூஜைக்குப் பொருள், திருவெம்பாவைப் பாடப் பொருள், திருவாதிரை—பங்குனி விழா, குந்தவை நினைவாக விளக்கு, குலோத்துங்கன் அம்பிகை கோயில் கட்டிய செய்தி, நல்லாவூர் அழகப் பெருமாள் பிள்ளை கோபுரம் மதில் சுவர் கட்டியது, பிக்ஷாடன மூர்த்தியின் உருவச் சிலை செய்து வழங்கியது முதலிய வரலாறுகள் குறிப்பிடப் பட்டுள்ளன.

நிர்வாகம்: நிரம்பச் சொத்துடையது. தர்மகர்த்தாக்களும் நிர்வாக அதிகாரிகளும் உள்ளனர். நன்முறையில் பரிபாலிக்கப்பட்டு வருகிறது.

சிறப்பு: இது அட்ட வீரட்டத் தலங்களில் கஜசம்மாரத் தலம் என்பது சிறப்புடையது தீர்த்த அமைப்பு கஜசம்மார மூர்த்தி, பிக்ஷாடன மூர்த்தி, மோகனும்பிகை, யந்திரப் பிரதிட்டை என்பன சிறப்புடையன.

இயந்திரப் பிரதிட்டை பற்றிச் சில வார்த்தைகள் கூறவேண்டும். கஜசம்மார மூர்த்தி சபையின் சுவரில் யந்திரப் பிரதிட்டையுள்ளது. இது ரகஸ்யம் என்பார்கள். இது பலமுறை புதுப்பிக்கப் பட்டுள்ளது. இதற்கு சங்கராசாரியர் தொடர்பு உண்டு என்று கூறுவர். பொதுவாக சிவாலயங்கள் சைவ சித்தாந்த நெறியை ஒட்டியே நடைபெற வேண்டும். ஆனல் இப்படிப்பட்ட

பிரதிட்டை; நவக்கிரகப் பிரதிட்டை போன்றன வழியாக சிவாலயங்கள் சைவ சித்தாந்தத்திலிருந்து வழுவுகின்றன. வேதாந்திகளாயிருந்த சங்கராசாரியரின் சீடர்கள் இன்று மூர்த்தி வழிபாட்டின் முக்கியத்தை அறிந்து ஆலய வழி பாட்டில் மனம் செலுத்துவது மிகவும் வரவேற்கத் தகுந்தது. ஆனால் இதன் மூலம் சைவ மரபில் அமைந்து இயங்கி வந்த ஆலயங்கள் அதனின்று வழுவி வேதாந்த மரபில் போய் விடாதபடி சைவமக்கள் தங்களைக் காத்துக் கொள்ளக் கடவர்.

சகஸ்ரலிங்க மூர்த்தியைச் சுற்றுப்புற மக்கள் அமாவாசை தினத்தன்று வணங்கி, வேண்டுதல் செலுத்தி வழிபடுகிறார்கள்.

கோகழி பற்றிய சிந்தனை

(சி. சுப்பிரமணிய தேசிகர், பருத்தித்துறை)

சித்தாந்தம் நவம்பர் 1965ஆம் ஆண்டு இதழில் (மலர் 38 இதழ் 11) திருவாசகம் — கோகழி பற்றி ஆசிரியர் எழுதிய கட்டுரையை அண்மையிலேதான் படிக்கும் வாய்ப்புக் கிட்டியது. திருப்பெருந்துறை ஊர் என்றும் கோகழி அவ்வூரிலுள்ள கோயிலென்றும் அக்கட்டுரையில் விளக்கப்பட்டுள்ளது, சைவ உலகை நன்கு சிந்திக்கும் படி அக்கட்டுரை ஊக்குவதாக உள்ளது. அதில் ஆசிரியர் ஆராய்ச்சியாளர்களதும் உரைகாரர்களதும் கருத்துக்களை எடுத்துக்காட்டி அவைகளைத் தடை விடைகளால் ஆராய்ந்து தம் கொள்கையை நிலைநாட்டியுள்ளார்கள். அவைபற்றி எனது கருத்துக்களை இதிலெழுதுகின்றேன்.

கன்னட நாட்டிலுள்ள "கோகழியே குருமணியாக வந்து தம்மை ஆட்கொண்ட பெருமானுக்குரிய இடம் என்று மாணிக்கவாசகர் பாராட்டும் கோகழியாகும்" என்பது பெரியார் ஒருவரின் கருத்தாகும். மற்றொரு

பெரியார் முன்னவரினும் சிறிது முன்னே சென்று, கோகழியாவது, திருப்பெருந்துறையன்று; பெல்லாரிப் பகுதியே; அப்பகுதியிலிருந்து ஒரு குருவானவர் திருப்பெருந்துறைக்கு வந்து வாதவூரரை ஆட்கொண்டார்; 'அதெந்துவே'என மாணிக்கவாசகர் கூறுவதால் அவருக்குக் கன்னட மொழி பழக்கமுண்டு; ஆகவே குருவானவர் கன்னடக் கோகழி நாட்டினர் என்பது பொருத்தமே; ஆகவே குருவானவர் சந்திரதீபத்துச் சாத்திரனுகி என்று திருவாசகம் (கீர்த்தித் திருவகவல் அடி 97) கூறுவதால் இக் குரு வங்காளத்தில சந்திரதுவீபம் என்ற இடத்திலிருந்த சந்திர......யாவர்; இவரையே மாணிக்கவாசகர் குறிப்பிடுகிறுர்; இவர் புத்த சமயத்தைப் போற்றியவர்; இவரிடமிருநதே மாணிக்கவாசகர் புத்த சமயஅறிவு பெற்றிருக்க முடியும், (புத்தரை வாதில் வெல்வதற்குப் போலும்) என்கின்றனர் இப் பெரியார்களின் கூற்றுக்களுக்குப் பத்திராசிரியர் ஒருவாறு சமாதானம் கூறியுள்ளனர். அவர் கூறும் சமாதானத்திஞல் இப் பெரியாரிருவரையும் மிகவும் பேணியே இம் மறுப்புக் கூறப்பட்டதென்று வெளியாகின்றது.

இப் பெரியாரிருவரும் அடிகளின் திருவாசகத்தையோ வரலாற்று நூல்களேயோ ஒரு சிறிதும் பொருட்படுத்தாமலேயே இவ்வாறெல்லாம் எழுதலாயினர். அடிகள் தம்மை ஆட்கொண்டவரைப் பற்றிக் கூறுங்கால், அநபரத் தொருவன் அவனியில் வந்து குருபரனுகி அருளினன் என்றும், அந்தமில பெருமை அழலுருக் கரந்து சுந்தர வேடத் தொருமுதல் உருவுகொண்டு இந்திர ஞாலம் போல வந்தருளினன் என்றும் புவனியிற் சேவடி தீண்டினன் காண்க என்றும் எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி என்றும் கூறினரன்றி, கோகழியே குருமணியாக வந்து தம்மையாட் கொண்ட பெருமானுக்குரிய இடமென்றும், கோகழிக் குருவானவரென்றும் அவரே வங்க நாட்டுச் சந்திரகோமியென்றும் கூறிற்றிலர். அங்ஙனமாக, புத்த சமயத்தைப் போற்றிய சந்திரகோமியாரே அடிகளின் குருபரனென்று கூற வாயும் அஞ்சாது வருமா? மனமும் அஞ்சாது எண்ணுமா?

திருவிளையாடற் புராணங்களும் திருவாதவூரடிகள் புராணமும் அடிகளின் குருமூர்த்தியைப் பற்றிக் கூறுவதை நோக்க வேண்டாமா ?

சந்திர தீபத்துச் சாத்திரனாகி...... இருந்தருளியும் என்னும் கீர்த்தித் திருவகவல் சந்திரதீபத்திலுள்ள அழகமர் பாலை என்னும் தலத்தில் ஆகாயத்தினின்றும் இறங்கி வந்த ஆறுகட்டி சுந்தர வேடமமைந்த சைவாசாரியராய் சர்வ சாத்திரஞ்ஞராய் (அங்குள்ள பக்குவான்மாக்களை யாட் கொள்ளும் பொருட்டு) இறைவர் எழுந்தருளியிருந்தனரென்று கூறுகின்றதன்றிக சந்திரகோமியைக் குறித்திலது.

இனி உரைகாரர்கள் கன்னட நாட்டில் கோகழி என்றொரு தலமிருப்பதை யறியாமலோ, அறிந்திருந்தும் அதனைக் கொள்ள விரும்பாமலோ கோகழி என்பது திருவாவடுதுறை என்றும், சீர்காழியென்றும், திருப்பெருந்துறையல்லது திருவாவடுதுறை என்றும் பலபடக் கூறுவாராயினர். அக் கூற்றுககளினால் அவை கோகழியாகி விடமாட்டா! அடிகள் கோகழி என்பது இவற்றின் வேறானதென்றே கருதியுள்ளனர். திருவாவடு துறையும் சீர்காழியும் தங்கள் பெயர்களோடு இருக்க அவற்றை விட்டுக் கோகழி என்றொரு புதிய பெயர் இட அடிகள் விரும்பமாட்டாரென்பது வெளிப்படை. கோகழி திருப்பெருந்துறையென்று கருதியிருந்தால், பண்டாய நான் மறையில் "நண்ணிப் பெருந்துறையை நம்மிடர்கள் போயகல, எண்ணியெழு கோகழிக்கரசை" என்றும், சிவ புராணத்தில், "கோகழி யாண்ட குருமணிதன் தாள் வாழ்க, சிரார் பெருந்துறை நம் தேவனடி போற்றி" என்றும் போற்றித் தருவகவலில் "அருபரத் தொருவன் அவனியில் வந்து (திருப் பெருந்துறையில்) குருபரனாகி யருளினன், கோகழி மேவிய கோவே போற்றி என்றும் ஒரே பாடலில் கோகழியையும் திருப் பெருந்துறையையும் அமைத்துப் பாடியிருக்க மாட்டார். அங்ஙனம் கூறுவது புனருத்தமாகும். திருப் பெருந்துறையில் குருந்த மரத்தடியில் குருபரன் எழுந்தருளியிருந்த

இடத்தைக் (கோயிலை) கோகழியென்று கருதியிருந்தால், திருப்பள்ளி யெழுச்சியில் திருப் பெருந்துறையுறை கோயிலும் காட்டி என்னுமிடத்தில் திருப் பெருந்துறை கோகழி காட்டியும் எனப் பாடியிருப்பார். இவற்றால் கோகழி என்பது திருப் பெருந்துறையுமன்று. திருப் பெருந்துறை கோயிலுமன்று என்பதே அடிகள் கருத் தென்பது தெளிவாகும்.

எழு கோகழி எனச் சிறப்பிக்கப்படுவதால் அது எழுச்சிமிக்க சிறப்பு வாய்ந்த தலமென்பது அறியப்படும். எனவே கன்னட நாட்டுக் கோகழியென்றே கோகழியைக் கொள்ள வேண்டியதாகும். அது அடிகள் காலத்தில் எழுச்சி பெற்றிருந்திருக்கலாம். அடிகள் கன்னடநாட்டுக் கோகழியைப் பாடியிருக்க மாட்டாரெனின் வங்கநாட்டுச் சந்திர தீபத்து அழகமர்பாலையைப் பாடலாமா? திருக் கைலாச மலையைப் பாடலாமா? இவைகள் தமிழகத் துள்ளனவா ?

இனி பண்டாய நான்மறை முதற்திருப் பாட்டில் "கடையேனை - தொண்டாகக் கொண்டருளுங் கோகழி யெங் கோமாற்கு நெஞ்சமே - உண்டாமோ கைம்மா றுரை" எனக் கன்னடக் கோகழிக் கோமானே அடிகளை யாட் கொண்டதாகக் கூறப்படுகின்றதே யெனின், நீத்தல் விண்ணப்பம், "கடையவனேனைக் கருணையினாற் கலந்து ஆண்டு கொண்ட...... உத்தர கோச மங்கைக் கரசே" என றும் "பொய்யவனேனைப் பொருளென ஆண்டு ஒன்று பொத்திக் கொண்ட...... உத்தரகோச மங்கைக் கரசே" என்றும் உத்தரகோச மங்கைக்கரசையும், திரு வெம்பாவை "ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான் கோலமும் நம்மை ஆட்கொண்டருளிக் கோதாட்டும் சீலமும்" என்றும் "ஐயா நீ ஆட்கொண்டருளும் விளை யாட்டில் உய்வார்கள் உய்யும் வகை யெலலாமுய்ந் தொழிந்தோம்" என்றும் திருவண்ணாமலையானையும், திருப்பொற் சுண்ணம் "ஏழையடியோமை யாண்டு கொண்ட நயமெ"ன்றும், திருக்கோத்தும்பி "அருவாய் மறைபயில் அந்தணனாய் ஆண்டு கொண்ட" என்றும்,

திருத்தெள்ளேணம், "பவமாயங் காத்தென்னை யாண்டு கொண்ட பரஞ்சோதி" என்றும், கண்ட பத்து, "கருணையினால் ஆண்டு கொண்ட திருத்துருத்தி மேயானை ஆணி கொள் தில்லை கண்டேனே" என்றும் கோயின் மூத்த திருப்பதிகம், "முன்னின்றாண்டாய் எனை முன்னம்" என்றும் தில்லைக்கூத்தப் பிரானையும் திருத்துருத்திமேயானையும் திருப்பெருந்துறைக் குருபரனின் வேறல்லர் என்று கண்டு பாடியதாகும் ஆதலால் கோகழிக் கோமானையும் அப்படியே கொள்ளல் வேண்டும் என்க.

கோயில் திருப்பதிகம் முழுவதும் தில்லைத் திருச்சிற்றம்பலக் கூத்தப் பிரானைத் திருப் பெருந்துறைக் குருபரனாகவே கண்டு போற்றிப் பாடியதாகும். அங்ஙனமல்லாவிடில் கோயில் திருப்பதிகத்தைத் திருப் பெருந்துறைத் திருப்பதிகமென்றே கூறவேண்டிவரும். கூத்தப்பிரானையே குருபரனாகக் கண்ட அடிகள் மற்றைத் தலங்களிலுள்ள மூர்த்திகளை அங்ஙனங் காணுதல் சொல்ல வேண்டுமோ என்பது. உத்தரகோச மங்கைக்குப் போன அடிகள் குருபரன் திருவுருக் காணப் பெறுமையால் நீத்தல் விண்ணப்பம் பாடிக் கண்டு கொண்டனரன்றோ! பண்டாய நான் மறையில் "நண்ணிப் பெருந்துறையை நம்மிடர்கள் போயகல எண்ணியெழு கோகழிக்கரசை... உத்தரகோச மங்கை மன்னிக்... கழியாதிருந்தானைக் காண்" எனக் கூறியது திருப் பெருந்துறைக் குருபரனின் வேறல்லர் கோகழிக்கரசும் உத்தரகோச மங்கை கழியாதிருந்தவனும் என்பது பற்றியேயாகும். அங்ஙனமல்லாது விட்டால் போவது திருப்பெருந்துறைக்கு, எண்ணுவது கோகழிக்கரசை, காண்பது உத்தரகோச மங்கை இருந்தானை என்பது எங்ஙனம் பொருந்தும்.

அடிகள் திருவாசகத்துள் கூறிய தலங்களெல்லாவற்றையும் சென்று தரிசித்தாரென்று கூறமுடியாது. திருவாசகத்தைக் கொண்டும் அடிகள் வரலாற்றைக் கொண்டும் ஒரு சிலவற்றையே தரிசித்தாரென்று அறிய முடிகின்றது. மற்றையவற்றை யெல்லாம் தாம் அறிந்தவற்

றையே அமைத்துப் பாடியுள்ளனர். கன்னட நாட்டுக் கோகழியும் அங்ஙனமாகவே அமையலாம். அடிகள் காலத்தில் எழுச்சி பெற்றிருந்த கோகழி இப்போது எழுச்சி குன்றிச் சிற்றூராயிருக்கலாம். உலக வழக்கிலோ வேறு நூல் வழக்கிலோ இல்லாது திருவாசகத்துள் மட்டும் ஓரைந்து இடத்தில் கூறப்பட்ட கோகழியைக் கன்னட நாட்டினரறிந்து அதன் பெருமையையுணர்ந்து தங்கள் நாட்டிலும் ஒரு கோகழியமைத்துக் கொண்டன ரென்பது எங்ஙனம் பொருந்தும்? எத்தனை பாடல் பெற்ற தலங்கள் இப்போது கிலமடைந்து புதர் மூடித் தரிசிப்பாரின்றிக் கிடக்கின்றனவே! அதனால் அவை பாடல் பெற்ற தலங்களல்ல வெனலாமா?

இனித் திருவாசகத்துள் பெரிதும் போற்றப்பட்ட திருப்பெருந்துறையும் உத்தரகோச மங்கையும், அதிலும் திருத்தசாங்கத்தில் இறைவரது ஊர் என்று போற்றப் பட்ட உத்தரகோச மங்கையும் மூவர் முதலிகள் பாடல் பெற்றிலவே!

அவர்கள் காலத்தில் அவைகள் சிறப்பிலவாய், அரசப் பெருந் தெருக்களின்றி, காட்டுப் பகுதிகளிலிருந் தனவா? அவர்கள் அவற்றை யறிந்திலரா? அவர்கள் அவற்றைப் பாடாமைக்குக் காரணம் ஒரு வழியாலும் விளங்க வில்லையே! பாடாமையால் அவைகள் சிறப்பில வாகுமா? இக்காலத்தும் தல யாத்திரை செய்பவர்களில் சிலரினும் சிலரே அவற்றைச் சென்று தரிசிப்பவர். அவ ருள்ளும் மிகச்சிலரே உத்தரகோச மங்கைக்குப் போய்த் தரிசிப்பவர். இதனாலிவைகள் சிறப்பிலவாயிடுமா? ஒரு காலத்துச் சிறப்புற்று விளங்குவதும், பின்னர் ஒரு காலத்துக் குறைவடைவதும் மற்றுமொரு காலத்துப் பழைய சிறப்புறுவதும் மாறி மாறி வருவனதாமே!

உ

சிவமயம்

சைவ சித்தாந்தி யார்?

[கயப்பாக்கம், திரு. சோமசுந்தரம் செட்டியார்]

" வாழ்வெனு மையல் விட்டு வறுமையாம் சிறுமை தப்பித்
தாழ்வெனுந் தன்மை யோடுஞ் சைவமாஞ் சமயஞ் சாரும்
ஊழ்பெற லரிது சால வுயர்சிவ ஞானத் தாலே
போழிள மதியி னானைப் போற்றுவா ரருள்பெற் றாரே "

" மானுடப் பிறவி தானும் வகுத்தது மனவாக் காயம்
ஆனிடத் தைந்து மாடு மரன்பணிக் காக வன்றோ
வானிடத் தவரு மண்மேல் வந்தரன் தனையர்ச் சிப்பர்
ஊனெடுத் துழலு மூம ரொன்றையு முணரா ரந்தோ "

" நரர்பயில் தேயந் தன்னில் நான்மறை பயிலா நாட்டில்
விரவுத லொழிந்து தோன்றல் மிக்கபுண் ணியந்தா னாகும்
தரையினிற் கீழை விட்டுத் தவஞ்செல்சா தியினில் வந்து
பரசம யங்கட் செல்லாப் பாக்கியம் பண்ணொ ணாதே "

[தவம்=சிவபூசை] ஆறறிவுடன் கூடிய மக்களாகிய நாம் எத்தனையோ பிறவிகளில் செய்த தவத்தின் பயனாகப் புண்ணிய பூமியாகிய இப் பாரதகண்டத்தில், மேலும் சிறப்பாகத் தமிழ்நாட்டில், இன்னும் சிறப்பாகச் சிவபெருமானை முழுமுதற் கடவுள் எனக் கொண்டு ஒழுகும் உத்தமமான சைவ உலகத்தில் தோன்றிய பெரும புண்ணியசாலிகளாவோம்.

சிவனே முழுமுதற் கடவுள். அவன் சம்பந்தமுடையது சைவம். அதனை அனுஷ்டிப்போர் சைவர். இவர்கள் பிரமாண நூல்கள், தேவாரம் முதல் பெரிய புராணம் ஈறாகவுள்ள தமிழ்வேதமெனப் பெறும் பன்னிரு திருமுறைகளும், திருவுந்தியார் முதல் சங்கற்ப நிராகரணம் ஈறாகவுள்ள பதினான்கு சித்தாந்த சாத்திரங்களுமேயாம். பாற்கடலுட் பிறந்த மீன் அப்பாலை யுண்ணாது வேறு சிலவற்றை உண்ணுவது போலச் சைவர் தங்கள் பிரமாண நூல்களைக் கற்காமல், சிந்திக்காமல், இறைவன் திருவருளைப் பெறாதோர் மயக்கத்தினால் பாடியுள்ள சாதாரண நூல்களைச் சதமெனக்

கருதியவற்றையே கற்றும் பிறரைக் கற்பிக்கவும் முயற்சி பல செய்தும் வருகிறார்கள் என்றால் என்னே இக் கலியின் கொடுமை! அந்தோ பரிதாபம்! இனியாகிலும் இவர்கள் திருந்தி நல்லறிவு பெறுவார்களாக.

சிலர் சைவர் என்றால் விபூதி உருத்திராக்கதாரணம் செய்து கொள்பவர்கள் என்கின்றனர். வேறு சிலர் (அந்நிய பதார்த்தம்) புலாலுண்ணாதவர் என்கிறார்கள். இன்னுஞ்சிலர் சிவனோடு செத்துப் பிறக்கும் சிறு தெய்வங்களைச் சமமெனக் கொண்டு எல்லாம் ஒன்று என்ற (குருட்டு நம்பிக்கையுடன்) சமரச வாழ்க்கையை உடையவர்கள் என்கின்றார்கள். மற்றும் சிலர் சீவகாருண்யமுடையவர் சைவர் என்கின்றனர். இம் மயக்கம் நீங்க உண்மைச் சைவர் யார் என்பதை இங்கு நிர்ணயிப்போம்.

உண்மைச் சைவர் (சைவ சித்தாந்தி)களின் இலக்கணம் இன்னதென்பதைக் காணபோம். நம் முன்னோர் கருத்தையே கூறுகிறேன்.

1. சிவபெருமானே முழுமுதற் கடவுள் எனக்கொண்டு அவனையே வணங்கி வழிபடுதல்.

2. அவன் சின்னங்களாகிய விபூதி உருத்திராக்கங்களை யன்புடன் அணிந்து கொள்ளல்.

3. அவனால் அநாதியே அருளிச்செய்யப் பெற்ற வேத, சிவாகமங்களை உண்மை நூல்கள் எனக் கொண்டு அவற்றையே ஓதி யுணர்ந்து அவற்றிலுள்ள விதிகளை யனுசரித்து, விலக்குகளை அறவே ஒழித்தல்.

4 அவன் திருவருளை முற்றும் கைவரப்பெற்ற அருளாளர்களால் அருளிச்செய்யப் பெற்ற தமிழ் வேதமாகிய பன்னிரு திருமுறைகளையும், பதினான்கு சித்தாந்த சாத்திரங்களையும் ஓதி யுணர்தல்.

5. குருட்டினை நீக்கும் குருவாகிய (தக்க ஆசாரியரை) ஒருவரையடைந்து அவரிடம் சிவாகம முறைப்படித் தீக்கை

செய்துகொண்டு சிவபூசை செய்தல், திருஐந்தெழுத்தின் பொருளுணர்ந்து சிரத்தையுடன் அதனை விதிப்படி எண்ணுதல்.

6. எல்லா வுயிர்களும் இறைவன் சந்நிதி எனக் கொண்டு அவைகளிடம் இரக்கங்காட்டி நடத்தல்

7. நல்ல இலக்கணங்களையுடைய சிவனடியார்களுடன் இணங்கியிருத்தல.

8. காமம், கோபம், பொய், பொறாமை, சிறப்பாக அகங்காரம் முதலிய தீய குணங்களை அறவே ஒழித்திருத்தல்.

9. எல்லாவற்றிற்கும் மேலாகவும், மிக முக்கியமாகவும் எல்லோரிடமும் பணிவுடன் நடந்துகொள்ளுதல் என்பன சில.

இவைகளை யெல்லாம் நாம் ஒருங்கே இலகுவாகப் பெற வேண்டுமானால், அறிவு, அடக்கம், நல்லொழுக்கம், இரக்கம் முதலிய நற்பண்புகள் நிறைந்த சான்றோர்களால் நிறுவப் பெற்ற அச்சங்கங்களில் சேர்ந்து அங்கு தற்போதுள்ள நல்லவர்களுடன் தொடர்பு கொண்டு ஒழுகி உய்யவேண்டும். மேலே காட்டப்பெற்ற இலக்கணங்களை யொருங்கே உடையவர் மிகச் சிலரே! இத்தகைய சிலரைக் கொண்டு விளங்கிவரும் அச்சங்கங்களும் மிகச் சிலவே. எனவே உண்மைச் சைவர் இவற்றை நன்கு ஆராய்ந்து நல்ல சங்கங்களில் சேர்ந்து நல்லவருடன் கூடிச் சிவனருளைப் பெறுவார்களாக! போலிகளுடன் இணங்க வேண்டாம். அவர்களைக் கண்டு அஞ்சி அகன்று விடவும், இதனை வலியுறுத்தும் ஒரு திருப்பாட்டுடன் இக்கட்டுரையை நிறுத்திக் கொள்ளுகிறேன்.

ஸ்ரீ சேக்கிழார் பெருமான் அருளிய திருத்தொண்டர் புராணத்துள், ‘பத்தராய்ப் பணிவார் புராணத்தின்’ கடைசித் திருப்பாட்டு. இதன் தலைப்பு “பொய்வேடமின்மை”!

சைவத்தின் தொன்மை

N. சரசுவதி, திருப்பூர்.

இறைவன், உயிர், உலகம் என்பவற்றை அறிவிக்கும் நூல்கள் சமய நூல்கள் எனப்படும். நூல்கள் ஏற்படாமுன் பழந்தமிழர் மண்ணிலும், தண்ணீரிலும், அனலிலும், வாயுவிலும், ஆகாயத்திலும் இறைவனை நாட்டி வழிபட்டு வந்தனர். மண்ணில் வழிபட்டவை பிருதுவிலிங்கம் எனப்படும். எடுத்துக் காட்டாகத் திருவாரூர், திருவொற்றியூர் முதலிய தலங்களில் காண்க. கும்பத்தில் நீர் நிறைத்து அவற்றில் இறைவனை நாட்டி வழிபட்டு வந்தனர். அவை அப்புலிங்கம் எனப்படும். அது திருவானைக்கா. ஓமம் வளர்த்து வேள்வி புரிந்து அனல் வடிவமாக இறைவனைக் கண்டு வழிப்பட்டு வந்தனர். அவை தேயுலிங்கம் எனப்படும். திருஞானசம்பந்தப் பெருமான், "பொங்கழல் உருவன் பூதநாயகன்" என இதனைக் கூறுவர். இது திருவண்ணாமலை. அவ்வாறே திருக்காளத்தி வாயுலிங்கம் எனப்படும். ஆகாயத்தில் வழிபட்டு வந்தமை கோவை மாவட்டத்தில் அவிநாசிக்குப் பக்கத்தில் ஆகாயராயன் என்று பல கோயில்கள் உள்ளனவற்றால் அறியலாம். சத்தியம் பண்ண வேண்டுமானால் ஆகாயராயன் கோயிலுக்கு அழைப்பது இந்த அவிநாசிப் பக்கத்து வழக்கம். திருத்தில்லை ஆகாயலிங்கம் எனப்படும். அது பொன்னம்பலத்தின் உட்சுற்றில் வடமேற்கு மூலையில் மாடியில் உள்ளது. பொன்னம்பலத்தில் உள்ள ரகசிய ஸ்தானம் என்ற இடம் இறைவனை ஆகாய வடிவில் வழிபடும் முறையைக் காட்டுகிறது. ஆகவே பஞ்சபூத ஸ்தலங்கள் தமிழ் நாட்டில் அப்புலிங்கம், பிருதுவிலிங்கம், தேயுலிங்கம், வாயுலிங்கம், ஆகாயலிங்கம் என அமைந்துள்ளமை அறியப்படும். இறைவனை நீரில் வழிபடுவதற்குக் காவிரி முதலிய ஆறுகளில் நதிகளை இறை வடிவாகக் கொண்டு மகளிர் வழிபட்டு வருவதை ஆடிமாதம் 18 ஆம் பெருக்குப் பண்டிகையால் அறியலாம்.

தொல்காப்பியத்தில் இறைவன் நிலையைக் கந்தழி என்று கூறப்படுகிறது. கந்தழி என்பதற்குப் பிறர், பிற பொருள் கூற நச்சினார்க்கினியர், கந்து அழி—பற்றுக்கோடு அற்ற நிலைமை எனப் பொருள் கூறியுள்ளார்.

பற்றுக்கோடு அழிகின்ற நிலைமையாவது இறைவனது உருவத் திருமேனி, அருவுருவத் திருமேனி, இவற்றிற்கு அப்பாற்பட்டு, அருவத் திருமேனியாய் இருக்கும் இறைவன் நிலையைக் கூறியவாறு. அது திருவாசகத்தில்,

" இன்றெனக் கருளி இருள்கடிந் துள்ளத்
 தெழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் தன்மை நினைப்பற நினைந்தேன்
 நீயலால் பிறிதுமற் றின்மை
சென்றுசென் றணுவாய்த் தேய்ந்துதேய்ந் தொன்றும்
 திருப்பெருந் துறையுறை சிவனே
ஒன்றும்நீ யல்லை அன்றியொன் றில்லை
 யாருனை அறியகிற் பாரே "

என்று கூறப்படுகிறது.

'உணர்ந்தார்க் குணர்வரியோன்' என்று திருக்கோவையாரிலும்; 'இன்ன தன்மையன் என்றறிவொண்ணா எம்மானை' என்று சுந்தரமூர்த்தி நாயனார் தேவாரத்திலும் வருவது காண்க.

இன்னும் அகப்பொருள் இலக்கணம் கூறி, ஒருவன் இத்தகைய அகப்பொருள் நிலையில் இல்லறம் புரிந்து வாழ்வது மட்டும் பொருளாகக் கொள்ளாமல் அதற்கு மேற்பட்ட முத்தி நிலையை அடைய வேண்டும் என்பதே பொருளாகக் கொள்க என்னுங் கருத்தால்,

" காமஞ் சான்ற கடைக்கோட் காலை
ஏமஞ் சான்ற மக்களொடு துவன்றி
அறம்புரி சுற்றமொடு கிழவனுங் கிழத்தியும்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே "

என விளக்கியருளினர் ஒல்காப்பெருமைத் தொல்காப்பியர்.

(தொல் – பொருள் – கற்பியல் – சூத். 192)

சிறந்தது பயிற்றல் என்பதற்குச் சிறந்த நிலையாகிய முத்தி நிலையை அடைதற்குரிய வழிகளில் பயிலுதல் எனப் பொருள் கொள்க.

இவற்றால் மிகப் பழைய காலத்தில் பழந்தமிழர்கள் இறைவனைப் போற்றி வந்தார்கள் என்பது அறியலாகிறது.

சமய வாழ்க்கை — இங்கும் அங்கும்

(மு. அருணாசலம்)

இந்திய ஆட்சி முறை சமயச்சார்பற்ற ஆட்சி என்று பறை சாற்றி வந்திருக்கிறார்கள். கல் தோன்றி மண் தோன்றாக் காலம் முதல் தெய்வ நம்பிக்கை கொண்டு வாழ்ந்த நாடு இந்திய நாடு. இந்த நாட்டில் இப்படிப்பட்ட ஓர் ஆட்சி மனப்பான்மை எத்தகைய விபரீதத்தில் கொண்டு விடும் என்பதற்கு, சென்ற ஆண்டு கடைசியில் கட்டி முடித்த குஜராத் மாகாணத்தில் உள்ள சோமநாதர் ஆலயத் திருப்பணி வரலாறு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும். இந்த வரலாற்றை இந்திய நாட்டின் பழந்தலைவர்களில் ஒருவரும், பேரறிஞரும் குஜராத்திய மொழியில் பல சிறந்த நூல்கள் இயற்றியவரும், மத்திய அரசில் மந்திரியாகவும் மாகாணக் கவர்னராகவும் இருந்தவருமாகிய கே. எம். முன்ஷி அவர்கள் தமது வித்தியாலயத்தின் பத்திரிகையில் இவ்வாண்டு முதல் தேதியிட்டு எழுதியிருக்கிறார். அவர் எழுதியவற்றின் சாரம் பின் வருவது :-

சோமநாதம் என்பது பன்னிரு ஜோதிர் லிங்கங்களுள் ஒன்று; மிகவும் பிரசித்திப் பெற்ற சிவஸ்தலமாகும். இது குஜராத் மாகாணத்தின் கத்தியவார் என்ற ஊரின் தென் கரையோரத்தில் உள்ளது. பதினேழு முறை கஜினி முகம்மது அதன் மீது படையெடுத்துச் சென்று அதிலுள்ள அளவற்ற செல்வத்தைக் கொள்ளையடித்துக் கோயிலை அடியோடு இடித்துச் சிலைகளை உடைத்து நாசம் செய்தான் என்று சரித்திரம் கூறும். பிரிட்டிஷ் ஆட்சி நடைபெற்ற வரையில் அக்கோயிலைக் கட்ட எந்த ஏற்பாடும் நடைபெறவில்லை. பின்னர் இந்தியா சுதந்திர மடைந்தது. அக்கோயிலை யாரும் புதுப்பிக்கக் கூடாதென்று கோயில் இருந்த ஜூனகாத சமஸ்தானத்தின் நவாப் உத்தரவிட்டிருந்தார். 1947 அக்டோபர் மாதம ஜூனகாத் சமஸ்தானம இந்திய யூனியனில் சேர்ந்து விட்டது. அடுத்தமாதம் அங்குச்சென்ற வல்லபாய் படேல் அதை மீண்டும் கட்ட இந்திய அரசாங்கம்

தீர்மானித்திருப்பதாக ஒரு பொதுக் கூட்டத்தில் அறிவித்தார்.

கோயில் கட்டுவதற்காகப் பல திசைகளிலிருந்தும் மண் சேகரித்தார்கள். (மிருத் சங்கிரகணம்) அப்போது முன்ஷி வேண்டுகோளின் படி சீனுவிலிருந்து ஒரு பிடி மண் அனுப்பிய நமது தூதர், கே. எம். பணிக்கர், மண் அனுப்பிவிட்டு, "இப்படிப்பட்ட காரியங்கள் இந்தியாவில் நடந்தால் சீனர் நம்மைப் பற்றி என்ன நினைப்பார்கள்?" என்று ஜவஹர்லால் நேருவுக்குத் தனிப்பட்ட முறையில் எழுதினார். அதன் மேல் நேரு முன்ஷியை அழைத்து 'நீங்கள் இவ்வாறு சோமநாதம் கோயிலைக் கட்ட நினைப்பது எனக்குப் பிடிக்கவில்லை, இது ஹிந்து மதத்திற்குப் புத்துயிர் கொடுக்கும் முயற்சியாகும்' என்று எழுதினார். இதற்குப் பதிலாக முன்ஷி, நேருவுக்கு அச்சில் ஆறு பக்கம் கொண்ட ஒரு கடிதம் எழுதி கோயில் கட்ட வேண்டிய நிலையை விளக்கினார். அதாவது, கோயில் கட்டுவது தன் சொந்த அபிப்பிராயம் அல்லவென்றும், அது மத்திய இந்திய மந்திரி சபையின் கொள்கை என்றும் சோமநாதம் இந்திய நாகரிகத்தின் சின்னங்களுள் ஒன்று என்றும், அதைப் புதுப்பிப்பது இந்திய மக்களின் கலாசாரத்தை நிறைவேற்றுவது அரசினர் கடமைகளுள் ஒன்று என்றும் விரிந்து விரிந்து எழுதினார்.

பின்னர் சோமநாதனைப் பிரதிஷ்டை செய்ய வேண்டிய சமயம் அங்கு வந்திருந்து கிரியைகளைத் தொடக்கி வைக்குமாறு அப்போது இந்திய ஜனாதிபதியாக இருந்த இராஜேந்திரப் பிரசாத்தை முன்ஷி வேண்டிக் கொண்டார். கூடவே, அவர் வர ஒப்புக் கொண்டால், பின்னர் எக்காரணம் பற்றியும் வாக்தவறக் கூடாதென்றும் எச்சரித்தார். இது பற்றி நேரு கொண்டிருந்த அபிப்பிராயம் பிரசாத்துக்குத் தெரியும். அது எப்படியிருந்தாலும், தாம் நிச்சயமாக வருவதாக இவர் வாக்களித்திருந்தார்.

உரிய காலத்தில் இராஜேந்திரப் பிரசாத் தலைமையில் பிரதிஷ்டைக் கிரியை நடைபெறுமென்று செய்தி பத்திரிகைகளில் வெளியாகியிருந்தது. இதைக் கண்டபோது ஜவஹர்லால் நேரு மிகவும் கோபமடைந்தார். போகக்கூடாதென்று பிரசாத்தை அவர் ஆன வரையில் தடுத்துப் பார்த்தார்; பலிக்கவில்லை. ஜனதிபதி பிரதிஷ்டைக் கிரியை நடத்தச் சென்றார். அவருடைய பிரசங்கம் எல்லாப் பத்திரிகைகளிலும் வெளியாயிற்று. அரசாங்கப பத்திரிகைகளில் மட்டும் வெளியாக வில்லை.

இது 1950இல் இருந்த நிலை. நேரு பிறகு மாறிவிட்டார் என்று முன்ஷி கூறுகிறார். போகட்டும். இந்த நிலையை நாம் நன்றாகச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இந்திய நாட்டுப் பிரதமர் நேரு பாரத மக்கள் அனைவருடைய அன்புக்கும் பாத்திரமானவர். அவருடைய ஆட்சி இப்படி இருந்தது. அதே கொள்கையின் வாரிசாகத்தான் இன்றும் ஆட்சி நடந்து வருகிறது. இப்படிப்பட்ட ஆட்சியில் மக்களிடையே எந்த அளவு சமய உணர்வு வளரும் என்பதை அன்பர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

"அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி" என்பது பழமொழி. மத்திய அரசாங்கத்தில் அனைவரும் நேருக்குப் பயந்தவர்கள். காந்தியுடன் தோளோடு தோள் கொடுத்துச் சுதந்தரப் போராட்டத்தில் ஈடுபட்ட இராஜேந்திரப் பிரசாத் நிலை இப்படியென்றால் மற்றவர்களைப் பற்றிச் சொல்லவா வேண்டும்? ஆகவேதான் பள்ளிகளில் சமய உணர்வு வேண்டாம், கண்டதே காட்சி, கொண்டதே கோலம் என்ற நிலைமை இந்திய அரசியலில் ஏற்பட்டது.

இது நமது பெருந்துர்ப்பாக்கியம் என்பது சொல்ல வேண்டுவதில்லை. எவ்வளவோ புராதன காலமாகத் தெய்வ நம்பிக்கை குடிகொண்டு இருந்த இந்த நாட்டினுடைய கதி இப்படி. முன்ஷியின் கட்டுரை வெளியான இதழின்

அடுத்த பக்கத்தில் அமெரிக்க நாட்டு நெப்ராஸ்கா மாகாணத்தில் சுப்ரீம் கோர்ட் பிரதம நீதிபதியா யிருக்கிற ராபர்ட்ஜி சிம்மன்ஸ் என்பவர் எழுதிய 'வழிபாட்டின் சக்தி' என்ற கட்டுரை வெளியாகி யிருக்கிறது. அதன் சாரம் பின் வருவது:—

சிம்மன்ஸ் 1954ஆம் வருடம் டிசம்பர் மாதம் 7ஆம் தேதி தம்முடைய காலே நேர நீதி விசாரணையை முடித்து விட்டுத் தம் அறைக்குச் சென்றார். இடது கை வலி யெடுத்தது. அதைத் தொடர்ந்து ரத்த ஓட்டத்தில் தடை; இருதயக் கோளாறு; சுவாசாசயத்தில் கெடுதி எல்லாம் ஒன்றாய்ச் சேர்ந்தன. அன்று கிறிஸ்துமஸ் தினம். டாக்டர்கள் எல்லா வைத்தியமும் செய்து பார்த்து முடியாதென்று கைவிட்ட நிலை. கிறிஸ்துமஸ் விழாவிற்காக அவருடைய பிள்ளைகளெல்லோரும் வந்திருந்தனர். அந்த நேரத்தில் வேறு வழியில்லாமல் எல்லோரும் சேர்ந்து ஆண்டவனைப் பிரார்த்தித்துக் கொண்டிருந்தனர். "எமலோகத்திலிருந்து வந்த கூற்றுவன் என் உயிரைக் கவராமல் மீண்டு சென்று விட்டான். நான் உட்புக விடாமல் எமலோக வாயில் அடைக்கப்பட்டது" என்று எழுதியிருக்கிறார். அப்போது நடந்தது ஒன்றும் அவருக்குத் தெரியாது. பிரக்ஞையற்ற நிலையில் நெடுநேரம் இருந்தார். பின்னர் பிறர் சொல்லித்தான் தெரியும். அவர் எழுதுகிறார்.

"அநுபவம் மிகுந்த வைத்தியங்களும் ரண சிகிச்சை மருத்துவர்களும் என்னைச் சூழ்ந்து நின்று வைத்தியம் செய்தார்கள்; சகல நவீன விஞ்ஞான முறைகளும் பொருந்திய சிறந்த ஆஸ்பத்திரியில் மிகச் சிறந்த மருத்துவ நிபுணர்கள் எல்லோரும் ஓயாமல் உழைத்தார்கள்; இருந்தும வந்த கூற்றுவனோடு போரிடும் ஆற்றல் என் உடமபுக்கு இல்லை. ஆனால் வேறு ஏதோ ஒரு சக்தி எனக்காக வேலை செய்தது. அது என்னவென்று அறிவதற்காக எனக்கு வந்த கடிதங்கள் முதலியவற்றை யெல்லாம் நான் ஆராய்ந்தேன். எல்லாக் கடிதங்களிலும் ஒரே செய்தி. 'நீ பிழைக்க அருள்

புரிய வேண்டும் என்பதற்காக ஆண்டவனை வேண்டுகிறோம்' தெய்வ சக்தி ஒன்றிருப்பதை உணர்ந்து அதை அவர்கள் வேண்டிக் கொண்டேயிருந்தார்கள். நான் பல நாடு சுற்றியவன்; ஆனதால் ஆங்காங்கு நண்பர் அநேகர் எனக்கு ஏற்பட்டிருந்தார்கள். நான் கூற்றுவனோடு போரிட்டதைக் கேட்டு எலலோரும் பிரார்த்தித்தார்கள். அமெரிக்க நண்பர்கள் பிரார்த்தனை செய்தது இயலபு. முகம்மதியர்கள் எனக்காக அல்லாவை வேண்டினார்கள். பௌததர் ஒருவர் 'உனக்காக புத்த பெருமானிடம் சென்று வேண்டுவதைத் தவிர வேறொன்றும் செய்ய முடியவிலலையே' என்று எழுதியிருந்தார். தைவானில் உள்ள சீனர் சிலர் 'சகல வல்லமையுடைய கடவுளே, இந்த நீதிபதி இன்னுங் கொஞ்ச நாள் நீதி வழங்கக் கருணை பாலிக்கலாகாதா? என்று வேண்டினார்கள். இந்தியாவினுடைய பண்பாடு, தத்துவ சாஸ்திரம், சமயம் இவற்றை அமெரிககர் தெரிந்து கொண்டதேயில்லை. இந்தியாவை அறிவதானல் இந்துமதத்தைப் புரிந்து கொள்ள வேண்டும். இந்துக்கள் மேலான பரம்பொருளின் போராற்றலில் நம்பிக்கை யுடையவர்கள். 'சர்வ சக்திமானாகிய கடவுள் உன்னைக் காப்பாற்றும்படி பிரார்த்தித்துக் கொள்கிறோம். நம் வாழ்க்கையில் என்றாவது ஒரு நாள் இந்தச் சோதனை நமக்கு வந்தே தீருகிறது. இநதச் சோதனையில் கடவுள் தான் காப்பாற்றுகிறார்' என்று அவர்கள் எழுதினார்கள். அராபியர் ஜெரூசலத்திலிருந்து பிரார்த்தனை செய்தனர். 'பிரார்த்தனை என்பது ஒரு சக்தி. இந்த சக்தி பிரபஞ்சத்தில் ஊடுருவிச் செல்லுகிறது. நோயைக் குணப் படுத்தும் ஆற்றலும் இதற்கு உண்டு' என்று அவர் எழுதினார்.

"சில ஆண்டுகளுக்கு முன் எங்களோடு ஒரு ஹிந்து பெண்மணி பிரயாணம் செய்தாள். வசந்த காலம்; ஒரு பூங்காவினூடே சென்றோம். மரங்கள் இளந்தளிர் பரப்பிக் கொண்டிருந்தன. பூக்கள் ஆங்காங்கு எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தன. தரையில் பசுமை பூக்க ஆரம்பித்தது உயிரற்றது போல் தோன்றியதெல்லாம் உயிர் பெற்று

விளங்கிற்று. 'இத்தனையும் பார்க்கும் போது நீ விரும்பினாலும் விரும்பா விட்டாலும் கடவுளின் ஆற்றலை நம்பித்தான் ஆக வேண்டும்' என்று அந்தப் பெண்மணி சொன்னார்.

"இத்தனையும் இப்போது நான் நினைத்துப் பார்க்கிறேன். கூற்றுவன் பிடியில் நான் சிக்கிய பொழுது டாக்டர்கள் உழைத்தார்கள் என்பது உண்மை. ஆனால் என் நண்பர்களும் உறவினரும் சேர்ந்து செய்த பிரார்த்தனையின் பயனாலேதான் நான் இன்று பிழைத்து உயிரோடு இருக்கிறேன் என்று எனக்கு நன்றாகத் தெரிகிறது"– இது அமெரிக்கர் எழுதிய கட்டுரை.

ஒரே பத்திரிகையில் அடுத்தடுத்து வந்திருக்கின்ற இந்த இரண்டு செய்திகளையும் நாம் அதிகமாக ஆராய்வது மிகை. பழமையாகவே தெய்வ நம்பிக்கை நிறைந்திருந்த இந்த நாட்டில் உலகாயதம் தாண்டவமாடுகிறது. இந்து மதத்திற்குப் புத்துயிர் கொடுப்பது தவறான காரியமென்று இந்தியாவின் முடிசூடா மன்னர் நினைத்தார். ஆனால் உலகாயத வாழ்க்கையுடையது என்று கருதுகின்ற அமெரிக்க நாட்டின் பிரதம நீதிபதி ஒருவர், கடவுளின் அருளே உலகெலாம் ஆளுகிறது என்று உபதேசிக்கிறார். இன்று இந்திய மக்களிடம் அரசியலிலும், வாழ்க்கையிலும் ஒரு காலத்திலும் கண்டிராத விபரீதமான அதர்மம் நிறைந்த நாஸ்திகப் போக்கை நாம் பார்க்கிறோம். இப்படித் தேசம் அழிவு நெறியில் செல்வதற்குத் தலைமை ஆட்சி பீடமே பொறுப்பு என்பதை மேற்காட்டிய குறிப்புக்கள் நன்கு உணர்த்துகின்றன, ஆகவே தெய்வ நம்பிக்கை யுடையவர் ஒவ்வொருவரும இதை எதிர்த்துத் தமது சொந்த வாழ்க்கையிலும், சுற்றுப்புற வாழ்க்கையிலும் தெய்வ மணம் கமழும்படி செய்வதற்குத் தீவிரமாக முயல வேண்டும.

[குறிப்பு: இக்கட்டுரை ஜனவரி மாத இதழுக்காக எழுதப்பட்டது. இடமின்மையால் இது வரை வெளிவரவில்லை]

மதிப்புரை

ஸ்வீடன்பர்க் தாபன மலர் வரப்பெற்ரேம். எமானுவேல் ஸ்வீடன் பர்க் 29—1—1688ல் ஸ்டாக்ஹோமில் பிறந்தவர். அவர் அறிவியல் வல்லுநராயிருந்ததுடன் சமய ஆராய்ச்சியிலும் சிறந்திருந்தார். அவர் சமயம் பற்றிய பொது ஆராய்ச்சிகள் பல செய்திருக்கிருர். அவ்வாராய்ச்சிகள் யாவும் பெரும்பாலும் நம் சைவ சித்தாந்தக் கொள்கைகளுக்கு ஒத்தனவாயுள்ளன. அது கண்டு வேலூரிலுள்ள திரு. D. கோபால் செட்டி என்பவர் ஸ்வீடன்பர்க் எழுதிய நூல்களைப் படித்து அவர் பெயரில் காட்பாடியில் ஒரு ஸ்தாபனத்தை நிறுவினர். தமிழிலும் அவர் எழுதிய நூல்கள் பலவற்றை மொழிபெயர்த்தார்.

அத் தாபனத்தில் ஸ்வீடன்பர்க்கின் 279ஆவது பிறந்த நாள் கொண்டாட்ட விழா 29—1—1967ல் நிகழ்ந்தது. அவ்வமயம் ஒரு மலரை காட்பாடித் தாபனத்தார் வெளியிட்டனர். அதில் ஸ்வீடன்பர்க் வரலாறு, திரு. D. கோபால் செட்டி வரலாறு, ஸ்வீடன் பர்க் தாபனம் தோன்றிய வரலாற்றுச் சுருக்கங்கள், பணிகள் முதலியன உள்ளன.

—(அம்பை)

"திருமுறைச் செல்வம்" என்ற நூல் ஒன்று வரப்பெற்ரேம். இதன ஆசிரியர் திரு. ந. வீ. செயராமன் எம். ஏ., (விரிவுரையாளர், தமிழ் ஆராய்ச்சித் துறை, அண்ணுமலைப் பல்கலைக் கழகம்) ஆவர். இதனை வெளியிட்டோர் சிதம்பரம் மலர்விழி வெளியீடு தாபனத்தார். இந்நூல் அண்ணுமலைப் பல்கலைக் கழகத் தமிழ் ஆராய்ச்சித் துறைத் தலைவர் வித்துவான் திரு. கோ. சுப்பிரமணிய பிள்ளை எம். ஏ., பி. எல்., அவர்களின் மணிவிழா நினைவுக் காணிக்கையாக வெளியிடப் பெற்றுள்ளது. விலை ரூ. 3-00 வேண்டுவோர் ஆசிரியருக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

இது திருமுறைகளைப் பற்றிய ஆராய்ச்சிக் கட்டுரைகள் ஒன்பதனைக் கொண்ட 137 பக்கமுள்ள சிறந்த நூலாகும். இந்நூலிலிருந்து ஆசிரியரின் சமயப்பற்று, திருமுறைகளிடத்துக் கொண்ட ஈடுபாடு முதலியவை

தெற்றென விளங்கும். இந்நூலினைப் படித்தால் அவர்களை திருமுறைகளிடத்து ஈடுபாடுள்ளதாகச் செய்யும் ஆற்றல் தானே போதரும் என்பதுறுதி. ஆதலின் யாவரும் வாங்கிப் படித்துப் பயன் பெறுவார்களாக.

(அம்பை)

சமாஜச் செயற்குழுக் கூட்ட அறிவிப்பு

26—3—67 ஞாயிறன்று காலை 9–30 மணிக்கு சமாஜ அலுவலகத்தில் செயற்குழுக் கூட்டம் நிகழும். மாதக் கணக்கு சரி பார்த்தல், பிற இன்றியமையாப் பொருள்கள் பற்றிய முடிவுகள் தீர்மானிககப் பெறும். உறுப்பினர்கள் யாவரும் தவறாது வருமாறு கேட்டுக் கொள்ளப் பெறுகிறார்கள். (துணைச் செயலாளர்)

சமாஜச் செய்திகள்

கீழ்க்காணும் அன்பர்கள் சமாஜப் புது ஆயுள் உறுப்பினர்களாயுள்ளனர் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். அவர்கள் விவரம் வருமாறு:

திரு. K. தியாகராஜப் பிள்ளை அவர்கள்,
82. இராஜா பசந்த்ராய் ரோடு,
கல்கத்தா — 29.

திரு. S. இராஜகோபாலன் அவர்கள்,
"உரிமையாளர்"
வள்ளிமேட்ச் இண்டஸ்டிரிஸ்,
சங்கரநயினார் கோயில்,
திருநெல்வேலி மாவட்டம்.

திரு. C. P. சிங்காரம் அவர்கள், B.com, B.L.,
S/o. M S. பழநியப்ப முதலியார், B.A.,
சப்டிவிஷனல் மாஜிஸ்திரேட்,
திருப்பூர்,
கோவை மாவட்டம்.

இப்பேரன்பர்களைப் போன்று பிற பெரு மக்களும் ரூ 50/- செலுத்தி சமாஜ ஆயுள் உறுப்பினராமாறு அனைவரையும் வேண்டிக் கொள்கிறோம்.

(துணைச் செயலாளர்)

பங்குனி மாத விசேட தினங்கள்

4 (18-3-67) நேச நாயனார் விழா.
6 (20-3-67) கணநாத நாயனார் விழா.
8 (22-3-67) முனையடுவார் நாயனார் விழா.
11 (25-3-67) பங்குனி உத்திர விழா.
14 (28-3-67) காரைக்காலம்மையார் விழா.
23 (6—4-67) தண்டியடிகள் நாயனார் விழா.

வருந்துகின்றோம்

நம் சமாஜத்தோடு நெடுநாளைய தொடர்புடையவரும் ஸ்ரீ சத் விஷய பக்த ஜன சபைச் செயலாளரும் ஸ்ரீச் சிதம்பரேசுவரர் கோயில் தொண்டருமாகிய சைவத் திருவாளர் மா. இராசமாணிக்கனார் அவர்கள் 8-1-'67 ஞாயிறு அன்று இவ்வுலக வாழ்வை நீத்தது கருதி வருந்துகின்றோம்.

அவர் நீறு துதைந்த நெற்றியும் குடுமியும் மூலக்கச்சம் வைத்துடுத்திச் செல்லும் அழகும் கோட்டும் குடையும் பையும் இன்சொல்லும் சைவச் சொற் பொழிவுகளுக்கும் தொண்டுகளுக்கும் முந்திக் கொள்ளும் பாங்கும் யாருக்கும் மனத்தை விட்டு அகலாதவை அப்பெரியார் பிரிவு சைவ உலகத்திற்குப் பேரிழப்பாகும்.

எல்லாம் வல்ல இறைவன் இன்னருளுக்குப் பாத்திரமாய் அவ்வான்மா இன்புற்றிலங்க அவனருளை வாழ்த்தி வணங்குவதோடு தந்தையைப் பிரிந்து வருந்தும் அவர் திருக்குமாரர்கள் நால்வருக்கும் இறைவன் மனச்சாந்தி தந்துதவ வேண்டுகின்றோம்.

அவர்கள் நினைவு வெளியீடாக "பாராயணத் திரட்டு" என்னும் நூல் ஒன்று 22-1-67 அன்று வெளியிடப் பெற்றுள்ளது.

(அம்பை)